Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. .. | } | | |
| Miscellaneous | .. .. | } | | |
| Preliminary Register | .. .. | } | **S.C.192/2021** | |
| Sessions | .. .. | } | | |
| | | } | Prosecution | – **PW6** |
| Deposition of witness for | | } | Defence | – |
| | | } | Court | – |

| | | |
|---|---|---|
| Name | : | தினேஷ்பாபு |
| Father/Husband Name | : | முத்துக்குமார் |
| Village | : | கணக்கன்பாளையம் பிரிவு, திருப்பூர் |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.08.2025

(எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

என் சொந்த ஊர் முதுகுளத்தூர் அருகில் உள்ள பண்ணந்தை கிராமம். நான் திருப்பூரில் கணக்கன்பாளையம் பிரிவில் சலூான் கடை வைத்துள்ளேன். சாட்சி அன்பு என்பவரை தெரியும். அவர் எனது சலூான் கடைக்கு அருகில் மளிகை கடை வைத்திருந்தார் தற்போது மனநலம் பாதிக்கப்பட்டு எங்கு இருக்கிறார் என்று தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்தை எனது சலூான் கடையில் வைத்து மண்டபம் போலிசார் 2019ம் ஆண்டில் மாதம் தேதி நினைவில்லை. ஒருநாள்

மாலை 3, 4 மணியளவில் வாங்கினார். என்னுடன் சாட்சி அன்பும் கையெழுத்து போட்டார். பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.6**. எதற்காக கையெழுத்து போட்டோம் என்றால் மண்டபம் காவல நிலையத்திலிருந்து தேவி என்பவரை தேடி வந்துள்ளோம் என்றும் அதற்காக கையெழுத்துபோடும்படி சொன்னதாக போட்டோம். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –

போலிஸ் விசாரணையில் கடந்த 15.11.2019 ம் தேதி இரவு 01 மணியளவில் நானும், அர்புதராஜ் மகன் அன்பு என்பவரும் கணக்கன் பாளையம் பிரிவு செயின் நகரில் செங்கோட்டையன் மனைவி தேவி என்பவரின் வீட்டின் அருகே பேசிக்கொண்டிருந்தோம் என்றும் அப்போது மண்டம் காவல் ஆய்வாளர் அவர்கள் வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர் எங்கள் முன்பு தயார் செய்தார் என்றும், அந்த பாாவை மகசரில் நானும், அன்பு என்பவரும் கையெழுத்து செய்தோம் என்றும் தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C.192/2021** |
| Sessions | .. | .. | } | |
| | | | } | Prosecution – **PW5** |
| Deposition of witness for | | | } | Defence – |
| | | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | சிராஜுதீன் |
| Father/Husband Name | : | சீனிமைதீன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | உதவி ஆய்வாளர் |
| Religion | : | |
| Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.08.2025

<u>(எதிரிகள் ஆஜர்.)</u>

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் கன்னிவாடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.11.2019ம் தேதி இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது அன்று காலை 10.30 மணிக்கு மண்டபம் காவல் ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின் பேரில் ஆய்வாளர் தலைமையில் காவலர் 1778 மணிகண்டன், காவலர் 1009 அன்பு செல்வம் ஆகியோர்கள் சகிதம் மண்டபம் காவல் நிலைய பகுதியான மண்டபம் சுடுகாடு அய்யனார்கோவில் அருகில் கருப்பு நிற பாலித்தின் கவருடன் நின்று கொண்டிருந்த

பின்னர் பெயர் விலாசம் தெரிந்து கொண்ட முரளிதரன் என்ற அருண் த/பெ.சித்திரகுமார், அவிநாசி இலங்கை அகதிகள் முகாம் திருப்பூர் என்பவரை விசாரித்தபோது அவர் தன்னிடம் கள்ளநோட்டுக்கள் இருப்பதாகவும், அதை மாற்றுவதற்காக வைத்திருப்பதாகவும் சொன்னார். அவரை நாங்கள் சோதனை செய்தபோது மேற்படி கருப்பு நிற பாலித்தின் கவரில் 500 ரூபாய் மதிப்பிலான 201 கள்ள நோட்டுக்கள் இருந்தது. ஆய்வாளர் திருமதி.மாயராஜலெட்சுமி காலை 11.30 மணிக்கு கைது செய்து பொது சாட்சிகள் யாரும் இல்லாததால் என் முன்னிலையிலும், காவலர் 1778 மணிகண்டன் முன்னிலையிலும் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 13.00 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து மேற்படி கள்ள நோட்டுக்களை கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 1வது கையெழுத்து என்னுடைய கையெழுத்துதான். அத்தாட்சியில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.5**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது அவரிடம் கூறிய வாக்குமூலத்தைத்தான் தற்போது நான் முதல் விசாரணையில் சொன்னேனா என்றால் ஆமாம். நான் எங்கு எத்தனை மணிக்கு இருக்கும்போது காவல் ஆய்வாளர் என்னை தனக்கு கிடைத்த இரகசிய தகவல் சம்மந்தமாக கூப்பிட்டார் என்றால் காவல் நிலையத்தில் காலை 10.30 மணியளவில் இருக்கும்போது. ஆய்வாளரிடம் நான் கொடுத்த வாக்குமூலத்தில் ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின்பேரில் அவர் என்னை மண்டபம் பகுதியில் ரோந்து செல்ல கூறினார் என்றும், ஆய்வாளருடன் நான் ரோந்து சென்றதாக சொல்லவில்லை என்றும் சொன்னால் வாக்குமூலத்தில் அவ்வாறு உள்ளது, ஆனால் ஆய்வாளருடன்தான் நான் ரோந்து சென்றேன். நான் ரோந்து பணிக்கு எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் என்னுடைய இருசக்கர வாகனத்தில் சென்றேன். காவல் நிலையத்திலிருந்து மண்டபம் நகர பகுதியில் ரோந்து சுற்றிவிட்டு சுடுகாடு சென்றோமா அல்லது நேரடியாக சுடுகாட்டுக்கு சென்றோமா என்றால் நகர பகுதியில் ரோந்து சுற்றிவிட்டு தான் சென்றோம். சுடுகாட்டுக்கு செல்லும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் காலை 11.00. காவல் நிலையத்திலிருந்து காலை 10.30 மணிக்கு கிளம்பி விட்டோம் என்றால் சரிதான். நாங்கள் சம்பவ இடமான சுடுகாட்டுக்கு

செல்லும்போது சென்ற காவலர்கள் சீருடையில் இருந்தோம் என்றால் சரிதான். நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்ற போது 2ம்எதிரி தப்பி ஓட முயன்றாரா என்றால் முயன்றார். மண்டபம் சுடுகாடு அருகில் அரசு மதுபானக்கடை மற்றும் அய்யனார்கோவில் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு நாங்கள் சென்றபோது 2ம்எதிரி ஒரு நபருடன் பேசிக்கொண்டிருந்ததாகவும், எங்களை பார்த்தவுடன் ஓட முயற்சித்தார் என்று தான் உள்ளது என்றால் சரியல்ல, போவோர் வருவோரை 2ம் எதிரி கூப்பிட்டு பேசிச்கொண்டிருந்ததாக தான் சொல்லியுள்ளேன். மண்டபம் சுடுகாடு பகுதி பொதுமக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். 2ம் எதிரி போவோர் வருவோர்களிடம் கள்ளநோட்டுக்களை மாற்றுவதற்காக கூப்பிட்டு பேசினார் என்பது சம்மந்தமாக அந்த பகுதியில் உள்ளவர்களிடம் ஆய்வாளர் விசாரித்தாரா என்றால் ஆய்வாளர் விசாரித்தாரா இல்லையா என்று எனக்குதெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தை யார் தயார் செய்தார் என்றால் ஆய்வாளர் தன் மடிக்கணினியில் தானே தயார் செய்தார். அத்தாட்சியில் கையால் எழுதினார். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சம்பவ இடமான சுடுகாட்டில் வைத்து தயார் செய்யப்பட்டது, அதில் நான் அங்கு வைத்துத்தான் கையெழுத்து போட்டேன்,. மடிக்கணிணியில் தயார் செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கு பிரிண்ட் எடுத்தோம் என்றால் காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடம் 500 மீட்டர் என்பதால் காவல் நிலையத்தில் எடுக்கப்பட்டது. காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலமோ, அத்தாட்சியோ தயார் செய்யவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தார் என்றும் நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள படி 2ம் எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க வில்லை என்றும் அதில் நான் கையெழுத்து செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:– இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.